குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 117-2022

அ.சா. 6

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குமார்(SSI of Police Shoolagiri PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. காட்டுரான் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 47 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 19.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சூளகிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். சூளகிரி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 608/2020 வழக்கு CC.No.117/2022 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் என்பவருடன் நான் ஏற்கனவே ஒன்றாக பணிப்புரிந்துள்ளதால் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு தெரியு.

அதனால் அவர் தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.05.2020ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் சரவணன் சூளகிரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்த போது சரிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் 608/2020 இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை முதல்கட்ட விசாரனைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் சரவணன் அவர்கள் அதே நாள் காலை 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் ஈரண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வைிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் காயம் பட்ட சாதப்பா சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்த தகவலை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 279, 304(A) கீழ் மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 17.05.2020ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் இவ்வழக்கில் இறந்த சாதப்பபா என்பவரின் உடலின் மீது பஞ்சாய்த்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் சரிதா, ஸ்ரீனிவாசன், சிக்கன்னா மகன் ஸ்ரீனிவாசன், பஞ்சாய்த்தார் சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். அதன் பிறகு வழக்கின் தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் முத்து கிருஷ்ணன் இவ்வழக்கில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரித்து பெறப்பட்ட **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய

வாகனங்களை ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்த மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கையை பெற்றார். TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட Splender இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **அ.சா.ஆ.8 ஆகவும்,** TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட Discover இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன **ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.05.2020ம்** தேதி சூளகிரி – உலகம் சாலையில் தொட்டி அருகே 16.00 மணிக்கு எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்கநிலைய பிணையில் விடுவித்தார். பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த தலைமை காவலர் ரமேஷ்குமார், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சரவணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். வழக்கு விபத்து சூளகிரி – உலகம் ரோட்டில் இரவு 09.00 மணி அளவில் நடைப்பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைப்படத்தில் சம்பவ இடத்தில் தெரு விளக்குகள் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் இறந்து போன சாதப்பா ஓட்டி சென்ற வாகனத்தை எதிரி ஓட்டி சென்ற வாகனத்தின் பின்புறம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்டத்தின் படி ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தின் பின்னாள் செல்லும் போது 10– 15 மீட்டர் இடைவெளி விட்டு செல்ல வேண்டும் என்றால் சரிதான். புகார் மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் இறந்து போன சாதப்பாவிற்கு பின் தலையில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன சாதப்பா

தலைகவசம் அணிந்து சென்றதாக வழக்கு கோப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் மாதிரி வரைப்படத்தில் வழக்கு விபத்தானது சூளகிரி – உலகம் ரோட்டில் மையப்பகுதியில் நடைப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன சாதப்பா சாலை விதிகளை கடைப்பிடித்து 10 – 15 மீட்டர் இடைவெளி மெதுவாக கவனத்துடனும் தன்னுடைய இருச்சக்கர வாகனத்தை ஓட்டி இருந்தால் வழக்கு விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. எதிரி சாலை விதிகளை முறையாக கடைப்பிடித்து இருச்சக்கர வாகனத்தை மெதுவாக ஓட்டி சென்றார் என்றாலும் இறந்து போன சாதப்பாதான் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் தான் ஓட்டி வந்த இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் ஆஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரி ஓட்டி சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. வழக்கு விபத்து இறந்து போன சாதாப்பாவின் அதிவேகமான மற்றும் ஆஜாக்கிரதையான செயல்தான் காரணம் என்றால் சரியல்ல. வழக்கு விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல. முறையான விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**